**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.504/ஆ5/2025, நாள். 29.01.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தியாகிகள் தினம் (Martyrs' Day) – 30.01.2025 அன்று காலை 11.00 மணிக்கு இந்திய விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துதல் மற்றும் தீண்டாமை எதிராக உறுதிமொழி –எடுத்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.அ4/e–1321001/2023 நாள். 28.01.2025

.....

பார்வையில் காணும் கடிதத்தில், தியாகிகள் தினத்தன்று (30.01.2025) இந்திய விடுதலை போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக காலை 11.00 மணியளவில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் என்றும், மேலும் மௌன அஞ்சலிக்கு பின்னர் தீண்டாமைக்கு எதிரான உறுதிமொழி எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து பள்ளிகளிலும் 30.01.2025 அன்ற காலை 11.00 மணிக்கு இந்திய விடுதலை போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி பின்னர் தீண்டாமைக்கு எதிரான உறுதிமொழியினை எடுத்து அதற்கான புகைப்படத்தினை b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – உறுதிமொழி

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

# தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதி மொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன் / குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.